அந்த இல்லம் தொடர்ந்து நடைபெறுகிறது; எவ்வளவு நாட்கள் அந்தக் குழந்தைகளுக்குத் தரப்படவில்லை என்று தனியாகவோ அல்லது பேரவைத் தலைவர்மூலமாகவோ என்னிடத்தில் தந்தால், உடனடியாக அரசு அதனுடைய அங்கீகாரத்தை இரத்து செய்வதற்குக்கூட தயாராக இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, அதற்குண்டான விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

94—

தேயிலைத் தோட்டக் கழகம்

***176—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் உள்ள என்.இ.பி.சி., ஹைபாரஸ்ட், வேவர்லி ஆகிய நலிவடைந்த எஸ்டேட்டுகளைத் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் ஏற்று நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வால்பாறையில் உள்ள என்.இ.பி.சி., ஹைபாரஸ்ட், வேவர்லி ஆகிய நலிவடைந்த எஸ்டேட்டுகளில் உள்ள தேயிலைச் செடிகள் மிகவும் வயதானவையாகவும், நலிவடைந்தவையாகவும் உள்ளதாலும், தேயிலையின் மகசூலும், தரமும் குறைவாக இருக்கும்

2012 ஏப்ரல் 16]

என்பதாலும், தொழிலாளர்களுடைய பற்றாக்குறையினாலும், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் அவ்வப்பொழுது இலாபம் மற்றும் நஷ்டத்தைச் சந்தித்து வருவதாலும், மேற்படி எஸ்டேட்டுகளைத் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் ஏற்று நடத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் உள்ள என்.இ.பி.சி., கவர்கல் எஸ்டேட், ஹைபாரஸ்ட் மற்றும் வேவர்லி ஆகிய நலிவடைந்த எஸ்டேட்டுகளில் உள்ள தேயிலைச் செடிகள் வயதான தேயிலைச் செடிகள் என்றும், ஆட்கள் பற்றாக்குறை என்றும், அதனால் அரசுத் தேயிலைத் தோட்டக் கழகம் எடுத்து நடத்துவதற்கான வாய்ப்பு இல்லையென்றும் குறிப்பிட்டார்கள். என்.இ.பி.சி., ஹைபாரஸ்ட் மற்றும் வேவர்லி ஆகிய தோட்டங்களில் ஏற்கெனவே பயிரிட்ட அந்தத் தேயிலைச் செடிகளை மீண்டும் புதிதாகப் பயிர் செய்து இந்த ஆண்டும், கடந்த ஆண்டும் yield கூடுதலாக வந்திருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருந்தாலும்கூட, தினக் கூலிக்கு வரக்கூடிய தொழிலாளர்கள் அதிகமாக வருவதற்குத் தயாராக இருந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே, அரசு மீண்டும் பரிசீலித்து, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், இப்போது நடத்திக் கொண்டிருக்கக்கூடிய தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் வரக்கூடிய நட்டத்தைக் காட்டிலும், இந்த மூன்று எஸ்டேட்டுகளிலும் கூடுதலான இலாபம் வருவதற்கான வாய்ப்புகள் உண்டு. எனவே, மறுபரிசீலனை செய்து அரசுத் தேயிலைத் தோட்டக் கழகம் அவற்றை எடுத்து நடத்துமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தனியார் தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைத் தூளின் தரமும், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழக தேயிலைத் தூளுடன் ஒப்பிடும்போது தரம் மிகக் குறைவாக உள்ளது. இந்தத் தனியார் தோட்டங்கள் அமைந்துள்ள*

இடம் கடும் பருவ மழை மற்றும் காற்று ஆகியவற்றினால் பாதிக்கப்படுகின்ற இடம். இதனால் தேயிலையின் மகசூலும், தரமும் குறைவாக இருக்கும். தேயிலைச் சாகுபடிக்குத் தேவையான நிழல்தரும் மரங்கள் மேற்கண்ட தனியார் தோட்டங்களில் தேவையான அளவில் இல்லை. இதனால் மகசூல் மற்றும் தரம் பாதிக்கப்படுகிறது. தேயிலைத் தூளின் தரம் மேற்கூறிய தனியார் தோட்டங்களிலுள்ள தேயிலைத் தூளின் தரத்தைவிட உயர்ந்தது. இந்நிலையிலே, உலகத் தேயிலைச் சந்தையில் ஏற்பட்டுள்ள மந்தமான நிலையின் காரணமாகவும், மேற்கூறிய காரணங்களினாலும் மேற்கூறிய தேயிலைத் தோட்டங்களைத் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் ஏற்று நடத்துவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். உறுப்பினர், அங்கு கரடி, புலி, யானை தொந்தரவு போன்று வேறுவிதமான மிருகங்களால் பாதிப்பு எதுவும் இல்லையா?

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சப்ஜெக்ட்டுக்குள் போகவில்லை. மனிதனைக் குறித்துதான் கேட்கிறேன்.

இந்தத் தேயிலை எஸ்டேட்டினுடைய பகுதிகளில் மிகவும் mist இருக்கிறது; yield குறைவாக இருக்கிறதென்று சொன்னார்கள். ஆனால், மற்ற தேயிலைத் தோட்டங்களைவிட இந்த மூன்று தேயிலைத் தோட்டங்களிலும் yield மட்டுமல்ல, அந்த இலையிலிருந்து எடுக்கக்கூடிய தூள் உலக ரீதியாகவே தரம் நிறைந்திருக்கக்கூடிய தரமான தேயிலைத் தூள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இப்பொழுது அங்கு பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள் அனைவருக்கும் P.F. பிடித்தம் செய்து கட்டவில்லை; Gratuity கட்டவில்லை; பென்ஷன் பணம் கட்டவில்லை; பலர் ஓய்வு பெற்றுவிட்டார்கள்; அவர்களில் பலர் இறந்துவிட்டார்கள். பணியிலிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு Gratuity, Pension, Bonus ஆகியவை கிடைக்காது என்பதால் கடுமையான நெருக்கடிக்கும், சிக்கலுக்கும் உள்ளாக்கப்பட்டு நெருக்கடியில் இருக்கிறார்கள். எனவே, அரசு மீண்டும் பரிசீலிக்குமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2012 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழு அமைத்து, தேவை ஏற்படின் அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள், மூலக் கேள்வி வால்பாறையைப் பற்றியது. விருதுநகருக்கு என்ன சம்பந்தம் இருக்கிறது?

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் என்ற நிறுவனம் இன்று மிகப் பெரிய சொத்துகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அது நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிறுவனத்தை disinvestment செய்து நல்ல முறையில் இயங்க வைத்தால், அந்தச் சொத்துக்களால் அரசுக்கு வருமானம் கிடைக்கும். அம்மாதிரியான கருத்துரு ஏதாவது அரசிடம் இருக்கிறதா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது relevance–இல் உள்ளது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Tan tea–இல் இன்றைய தலைமுறையினர் தேயிலைத் தோட்டப் பணி செய்ய விருப்பம் இல்லாததாலும், அவர்கள் தமது குடும்பத்துடன் நகரத்தை நோக்கி வேறு பணிகளுக்குச் சென்றுவிடுவதாலும், தொழிலாளர்கள் பற்றாக்குறை உள்ளது. இதுகுறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 9–3–2012 அன்று நடைபெற்ற சீராய்வுக் கூட்டத்தில் வழங்கிய ஆலோசனைகளின்படி இயந்திரங்கள்மூலம் பசுந்தேயிலை அறுவடை செய்ய துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.